# தொழிற் முன்னேற்ற பாதை

# அச்சுவார்ப்பவர் தொழிற்நுட்பவியலாளர்

## (பவுண்ட்ரிமேன் டெக்னீசியன்)



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- சுய மற்றும் தொழிற்சாலையில் கடை பிடிக்க வேண்டிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பற்றிய அடிப்படை திறன்.
- பணிக்கு தேவையான கை கருவிகள் மற்றும் அளவீட்டு கருவிகளை பயன்படுத்தும் திறன்.
- பல்வேறு வகையான மண் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான திறன்.
- பல்வேறு வகையான மோல்டுகள் மற்றும் கோர் தயாரிப்பு இயந்திரங்களை, வெவ்வேறு விதமான தொழில்நுட்பங்களை கொண்டு தயாரித்து இயக்குவதற்கான திறன்.
- பல்வேறு வகையான உலைகளை (Furnace) இயக்குதல் மற்றும் லைனிங், ரீலைனிங் செய்வதற்கான திறன்.
- தொழில்நுட்ப வரைபடங்களை புரிந்துக்கொண்டு அதற்கேற்றவாறு வார்ப்புகளை உருவாக்கும் திறன்
- வார்ப்புகளின் தேவையற்ற பாகங்களை நீக்குதல் ,பினிஷிங் செய்தல் மற்றும் அவற்றை பரிசோதிப்பதற்கான திறன்.
- முறையான தகவல் தொடர்பு மற்றும் வேலைபாய்ப்பு பற்றிய திறன்.





## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

ஹாண்ட் மோல்டு மற்றும் கோர் தயாரிப்பு பயிற்சியாளர் / இயந்திர இயக்கு பயிற்சியாளர், உலை இயக்கு பயிற்சியாளர் (Furnace operator trainee), பெட்டிலிங் பயிற்சியாளர், பவுண்ட்ரி ஆய்வக பயிற்சியாளர் மற்றும் செமி- ஸ்கில்டு தொழில்நுட்ப பயிற்சியாளர்

### இடை நிலை

ஹாண்ட் மோல்டு மற்றும் கோர் தயாரிப்பவர், மோல்டு மற்றும் கோர் தயாரிப்பு இயந்திரம் இயக்குபவர், உலை இயக்குபவர்(Furnace operator) பெட்லர் (Fettler), பவுண்ட்ரி ஆய்வகர், திறன் தொழிலாளர், மேற்பார்வையாளர்,

### மூத்த நிலை

ஷிப்ட் பொறியாளர், முது நிலை பொறியாளர், தொழில் முனைவோர்.



## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- பல்வேறு வகையான மோல்டு மற்றும் கோர் தயாரிக்கும் இயந்திரங்களை இயக்க அறிந்திருத்தல்.
- ஹாண்ட் மோல்டு தயாரிக்கும் முறையை அறிந்திருத்தல்.
- பல்வேறு வகையான உலைகளில் (Furnace) பணியாற்றுவது பற்றி அறிந்திருத்தல்.
- இயந்திரங்களை பராமரிப்பது மற்றும் அதில் ஏற்படும் பழுதுகளை கண்டறிந்து பழுதினை நீக்குதல்.

## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- பணிமனை உதவியாளராக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரிய வாய்ப்பு.
- இளநிலை பயிற்சி அலுவராக அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிபுரிய வாய்ப்பு.
- மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்:
  ரயில்வே துறை (RAILWAYS)
  துப்பாக்கி தொழிற்சாலை (ORDNANCE FACTORY BOARD)
  கப்பல் கட்டும் தளம் (NAVAL DOCKYARD)
  ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்.(HAL)
- மற்றும் பலதனியார் நிறுவனங்கள் –
  அசோக்லேலண்டு (Ashok Leyland)
  ஹூண்டாய் (HYUNDAI), டிவிஎஸ் (TVS)
  எல்எம்டபுள்யு, (LMW), டாட்டா (TATA),ஹிட்டாச்சி (HITACHI)
  எல் & டி (L&T), எஸ் இ போர்ஜ் (SEFORGE LTD)
  பிரேக்ஸ் இந்தியா( BREAKS INDIA)
  வீல்ஸ் இந்தியா (WHEELS INDIA), டெஸ்மோ (TEXMO)
  அக்வா சப் (AUQUSUB) மற்றும் பல தொழிற் நிறுவனங்களில் பணிபுரிய வாய்ப்பு. ஐக்கிய அரபு எமிரேட் , சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல வெளிநாடுகளில் பணிபுரிய வாய்ப்பு.சிறு,குறு, நடுத்தர நிறுவனங்களில் பணிபுரிய வாய்ப்பு.

## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பயிற்சி பெறுதல்.
- தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநராக பணியில் சேருவதற்கான (craft instructor training scheme) பயிற்றுநர் பயிற்சி மையத்தில் சேர்ந்து சான்றிதழை பெறுதல்.
- பாலிடெக்னிக் கல்லூரிகளில் முழு நேர மற்றும் பகுதி நேர பட்டயப்படிப்பில் சேரலாம்.
- தேசிய திறன் பயிற்சி மையங்கள் மற்றும் பிற பயிற்சி மையங்களில் நடத்தப்படும் சிறப்பு குறுகிய கால படிப்புகளில் (ஆட்டோ கேட், புரோ இ,சாலிட் ஒர்க்ஸ், என்டிட்டி முதல் நிலை (NDT Level 1) சேரலாம்).

QUEST ALLIANCE

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

Industrial Training Institute